ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2263/3 - 2022 ජනවාරි මස 18 වැනි අඟහරුවාදා - 2022.01.18
*2263/3 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி சனிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்*

*3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

திருத்தப்பட்டவாறான 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம்:-

(1) 2021 ஆம் ஆண்டில் ஐ. அ. டொலர் 10.25 மில்லியன் எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுடன் எச்சீஎல் டெக்னொலஜீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தினால், ஏற்றுமதிக்காகத் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியலினால் செயற்படுத்தப்பட்ட சேவைகள் என்பவற்றை வழங்குவதற்கும், 2032ஆம் ஆண்டளவில் உள்நாட்டவர்கள் 5,325 பேருக்கு தொழில்நுட்ப ரீதியில் தகைமைபெற்ற தகவல் தொழில்நுட்வியல்சார் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்குமான கருத்திட்டத்தை, (இதனகத்துப்பின்னர் "கருத்திட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) திருத்தப்பட்டவாறான 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் " SDP சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நோக்கங்களுக்காக, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளம் கண்டுள்ளேன் இதன். தொடக்கமாக, இல. 752, ஒரியன் சிட்டி, கொழும்பு மற்றும் சினமன் லைட், இல. 05, நீதியரசர் அக்பர் மாவத்தை, கொழும்பு 02 ஆகிய முகவரிகளில் அமைந்துள்ள எச்சீஎல் டெக்னொலஜீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனம் 2020, சனவரி 08 ஆந்திகதி இலங்கை முதலீட்டுச் சபையுடன் (இதனகத்துப்பின்னர் BOI எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஓர் உடன்படிக்கையை செய்தது.

(2) எச்சீஎல் என்பது, இந்தியாவில் உத்தரப் பிரதேசத்திலுள்ள நொய்டா நகரில் தலைமையகத்தைக் கொண்டுள்ளதும், தகவல் தொழில்நுட்பவியல் (IT) சேவைகளிலும் ஆலோசனைகளிலும் விசேட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளதுமான இந்திய பல்தேசிய தொழில்நுட்பவியல் கம்பெனியொன்றான, எச்சீஎல் டெக்னொலஜீஸ் இன் இந்தியா எனும் நிறுவனத்திற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமொன்றாகும். எச்சீஎல் டெக்னொலஜீஸ் நிறுவனமானது. போர்ப்ஸ் (Forbes) சஞ்சிகையினால் உலகில் தலைசிறந்த 2000 நிறுவனங்களுள் ஒன்றாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

(3) புதிய கருத்திட்டத்துக்கான எதிர்பார்க்கப்பட்ட முதலீடு ஐ. அ. டொலர் 10.25 மில்லியன் ஆகும் என்பதுடன், அதில் ஐ. அ. டொலர் 2.40 மில்லியன் உரிமை முதல் பங்களிப்பு மீதும் (equity contribution) ஐ. அ. டொலர் 5.90 மில்லியன் கடன் மீதும் மற்றும் ஐ. அ. டொலர் 1.95 மில்லியன் வைத்திருப்பு ஈட்டுகைகளின் மீள்முதலீடு (reinvestment of retained earnings) என்றவகையிலும் நிதியளிக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் மொத்தமாக ஐ. அ. டொலர் 10.25 மில்லியன் இக்கருத்திட்டத்தில் முதலீடு செய்யப்படும். 2026, மார்ச்சு மாதமளவில், இக்கருத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் புதிய தொழில் உருவாக்கம் தொழில்நுட்ப ரீதியில் தகைமைபெற்ற 2,424 உள்நாட்டவர்களாக இருக்கும் என்பதுடன், 2032 மார்ச்சு மாதமளவில் அவ்வெண்ணிக்கை 5,325 பேர்கள் வரையில் படிப்படியான தொழில் அதிகரிப்பாகக் காணப்படவும் வேண்டும்.

(4) இக்கருத்திட்டம் பின்வரும் நியதி நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதற்குட்பட்டு, SDP சட்டத்தின் நியதிகளின்படி கருத்திட்டத்துக்கான விலக்களிப்புக்கள் வழங்கப்பட வேண்டும்;

(அ) 2021 திசெம்பர் 31 ஆந்திகதிக்குள் ஐ. அ. டொலர் 10.25 மில்லியனினைக் கொண்ட குறைந்தபட்ச முதலீடொன்று இக்கருத்திட்டத்தில் முதலீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) சொல்லப்பட்ட காலவரையறைகளில் உள்ளவாறு உள்நாட்டுத் தொழில் எண்ணிக்கையின் 5 சதவீதம் வரையிலான பற்றாக்குறைக்கு அமையவும், இந்நிபந்தனைக்கான ஓர் இணங்கியொழுகாமையாகக் கருதப்படாதும், ஆகக்குறைந்தது கீழுள்ள பட்டியலில் காணப்படும் காலவரையறைகளுக்கிணங்க கம்பெனியானது குறைந்தபட்ச அளவிலான இலங்கை ஊழியர்களையேனும் தொழிலுக்கமர்த்த வேண்டும்.

| | தொடக்கக் கட்டம் (2021, மார்ச்) | இயலுமை ஆற்றல் கட்டம் (2026, மார்ச் அளவில்) | இயலுமை ஆற்றல் கட்டம் (2029, மார்ச் அளவில்) | இயலுமை ஆற்றல் கட்டம் (2032, மார்ச் அளவில்) |
|---|---|---|---|---|
| தொழில்நுட்ப ரீதியில் தகைமைபெற்ற ஊழியர்கள் (திரட்சியாக) | 384 | 2,424 | 3,550 | 5,325 |

(இ) சேவைகளிலிருந்தான தொண்ணூறு சதவீதத்துக்கும் (90%) மேற்பட்ட வருமானமானது, மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுதல் வேண்டும்.

(5) திருத்தப்பட்டவாறான SDP சட்டத்தின் நியதிகளின்படி, மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக, இவ்வறிவித்தலின் அட்டவணையில் தரப்பட்ட விலக்களிப்புக்கள் கருத்திட்டக் கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

### அட்டவணை

(1) 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்

(அ) கூட்டிணை வருமான வரியிலிருந்தான (CIT) விலக்களிப்பு

SDP சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளை, அச்சட்டத்தின் 3 (5) ஆம் பிரிவின் நியதிகளின்படி பாராளுமன்றத்தின் முன் எத்திகதியில் இடப்படுகின்றதோ அத்திகதியிலிருந்து கணிப்பிடப்படும் பன்னிரெண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு கூட்டிணை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட பன்னிரெண்டு (12) ஆண்டுகால வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர், அந்த நேரத்தில் காணப்படும் கூட்டிணை வருமான வரி, கருத்திட்டக் கம்பெனியின் கருத்திட்டத்தினால் தோற்றுவிக்கப்பட்ட இலாபங்கள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஆ) சலுகை வரி விகிதம்

மேற்சொல்லப்பட்ட பன்னிரெண்டு (12) ஆண்டுகால வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர், அதன்பின்னரான ஐந்தாண்டு (05) காலப்பகுதிக்கு, அந்த நோத்தில் காணப்படும் கூட்டிணை வருமான வரியின் ஐம்பது சதவீதம் (50%) கருத்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட வரிசெலுத்தப்படற்பாலதான இலாபத்தின்மீதும் வருமானத்தின்மீதும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(இ) பங்கிலாப வரி

விலக்களிக்கப்பட்ட இலாபத்திலிருந்து பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபம் மீதான வரியானது, பன்னிரெண்டு (12) ஆண்டுகால கூட்டிணை வருமான வரிக்கான விலக்களிப்புக் காலப்பகுதியின்போதும், அதன்பின்னரான ஓராண்டின் (01) போதும், வருமான வரியிலிருத்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) தொழிலின் மீதான வருமான வரியிலிருந்தான விலக்களிப்பு

கூடியபட்சமாக இருபது (20) வெளிநாட்டவர்கள் எனும் எண்ணிக்கைக்குட்பட்டு, ஐந்தாண்டு (05) காலப்பகுதிக்கு மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்துடன் தொடர்புடைய தொழிலிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களில் இருந்து எழுகின்ற வருமான வரியிலிருந்து கருத்திட்டத்தின் வெளிநாட்டு ஊழியர்கள் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்

SDP சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளை, அச்சட்டத்தின் 3 (5) ஆம் பிரிவின் நியதிகளின்படி பாராளுமன்றத்தின் முன் எத்திகதியில் இடப்படுகின்றதோ அத்திகதியிலிருந்து கணிப்பிடப்படும் பன்னிரெண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு, சேவைகளிலிருந்து தொண்ணூறு சதவீதத்துக்கும் (90%) மேலான வருமானமானது மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட வேண்டும் எனும் மேலதிக நிபந்தனைக்குட்பட்டு, BOI இனால் அங்கீகரிக்கப்பட்டவாறு கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக தேவைப்படுத்தப்பட்டதும் கருத்திட்டத்துடன் தொடர்புடையதுமான எல்லாப் பொருட்களினதும் (தொழிற்கூடம், இயந்திரதொகுதி, உபகரணங்கள்) இறக்குமதிக்காக, 2002ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் கீழான சேர்பெறுமதி வரிச் (VAT) செலுத்துகை மற்றும் விதிப்பனவிலிருந்து இக்கருத்திட்டம் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்

SDP சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளை, அச்சட்டத்தின் 3 (5) ஆம் பிரிவின் நியதிகளின்படி பாராளுமன்றத்தின் முன் எத்திகதியில் இடப்படுகின்றதோ அத்திகதியிலிருந்து கணிப்பிடப்படும் பன்னிரெண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு, இறக்குமதி செய்யப்பட்ட, கருத்திட்டத்துடன் தொடர்புடைய எல்லாப் பொருட்களின் மீதும் (தொழிற்கூடம், இயந்திரத்தொகுதி, உபகரணங்கள்) 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் (PAL) செலுத்துகை மற்றும் விதிப்பனவிலிருந்து இக்கருத்திட்டம் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(4) சுங்கக் கட்டளைச்சட்டம் (235ஆம் அத்தியாயம்)

SDP சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளை, அச்சட்டத்தின் 3 (5) ஆம் பிரிவின் நியதிகளின்படி பாராளுமன்றத்தின் முன் எத்திகதியில் இடப்படுகின்றதோ அத்திகதியிலிருந்து கணிப்பிடப்படும் கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின்போது, சேவைகளிலிருந்து தொண்ணூறு சதவீதத்துக்கும் (90%) மேலான வருமானமானது மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட வேண்டும் எனும் மேலதிக நிபந்தனைக்குட்பட்டு, இறக்குமதி செய்யப்பட்ட, கருத்திட்டத்துடன் தொடர்புடைய எல்லாப் பொருட்களின் மீதும் (தொழிற்கூடம், இயந்திரதொகுதி, உபகரணங்கள்) சுங்கக் கட்டளைச்சட்டத்தில் (235ஆம் அத்தியாயம்) குறிப்பீடு செய்யப்பட்டவாறான சுங்க இறக்குமதித் தீர்வை விதிப்பனவு மற்றும் செலுத்துகையிலிருந்து இக்கருத்திட்டம் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், ஏற்பெதிர் பொருட்பட்டியலிலுள்ள (negative list) பொருட்கள், ஒன்றில் இலங்கையில் முழுமையாகத் தயாரிக்கப்படாதவிடத்து அல்லது அவை போதிய தரத்தில், அளவில் மற்றும் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கான காலவரையறையில் கிடைக்கத்தக்கனவாக இல்லாதவிடத்து அத்தகைய பொருட்களின் ஏதேனும் இறக்குமதி பற்றி BOI இனால் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்

SDP சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளை, அச்சட்டத்தின் 3 (5) ஆம் பிரிவின் நியதிகளின்படி பாராளுமன்றத்தின் முன் எத்திகதியில் இடப்படுகின்றதோ அத்திகதியிலிருந்து கணிப்பிடப்படும் பன்னிரெண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு, இறக்குமதி செய்யப்பட்ட, கருத்திட்டத்துடன் தொடர்புடைய எல்லாப் பொருட்களின்

*மீதும் (தொழிற்கூடம், இயந்திரத்தொகுதி, உபகரணங்கள்) 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்திலும் அதன் திருத்தங்களிலும் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஆயவரிச்* (CESS) *செலுத்துகை, மற்றும் விதிப்பனவிலிருந்து இக்கருத்திட்டம் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

*கருத்திட்டத்தினால் இறக்குமதி செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பொருட்களின் அளவுகள் மற்றும் பெறுமானங்களுக்காக மேலே (2), (3), (4) மற்றும் (5) இல் குறிப்பீடு செய்யப்பட்ட விலக்களிப்புக்கள்,* BOI *இனது முன்னங்கீகாரத்துக்கு உட்பட்டவையாக இருத்தல் வேண்டும்.*

**மஹிந்த ராஜபக்ஷ, பா. உ,**
*பொருளாதாரக் கொள்கைகள் மற்றும்*
*திட்ட அமுலாக்கல் அமைச்சர்.*

*பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சு,*
*2021, திசெம்பர் 31.*

EOG*01- 0198*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*